26.03.2026

DVC.11/2022

PW–2, அழகர்சாமி த/பெ.அழகர்

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் எம்.டெக் முடித்துள்ளேன். நான் எங்கு படித்தேன் என்றால் கர்நாடாக திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் படித்துள்ளேன். நான் ஆரம்பத்தில் இரயில்வேயில் உதவி ஓட்டுனராக டீசல் டிரைவராக சோழாபூரில் மகாராஷ்டிராவில் 1989 ல் சேர்ந்தேன். அப்போது எனக்கு திருமணமாகிவிட்டது. 1982ல் திருமணமாகி எனக்கு 2 குழந்தைகள் இருக்கும் போது தான் எனக்கு வேலை கிடைத்தது என்றால் சரிதான். எனது 2 குழந்தைகளுமே மகாராஷ்டிராவில் ஆரம்ப பள்ளியில் இருந்து பள்ளிப்படிப்பு முடிக்கும் வரை படித்தார்கள் என்றால் சரிதான். நான் 2003ம் வருடம் புனேயிக்கு வந்தேன். நான் செப்டம்பர் 2021ம் வருடம் புனேயில் இருக்கும் போது விருப்ப ஓய்வு பெற்று ஓய்வு பெற்றேன். 2020ல் தான் தமிழ் மேட்டரி மோனி மூலம் வரன் பார்த்தேன் என்றால் சரிதான்.

எனது மகளுக்கு திருமணமாகும் போது வயது 33 என்றால் சரிதான். எங்கள் ஊர் வழக்கப்படியும் சமயம் வழக்கப்படியும் வயதுக்கு வந்துவிட்டாளே திருமணம் முடிப்போம் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு 33 வயது வரை திருமணம் முடிக்காததற்கு காரணம் எதாவது உண்டா என்றால் எனது மகள் படித்து நல்ல வேலைக்கு செல்ல வேண்டும் என்பதால் திருமணம் முடிக்கவில்லை. எனது மகள் 2017ம் வருடம் வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். ஆனால் குறைந்த ஊதியத்திற்கு தான் சென்றார். எனது மகள் படித்து முடித்து வேலைக்கு சென்ற பிறகும் திருமணம் வேண்டாம் என்று தான் இருந்தார் என்றால் சரியல்ல. வேலைக்கு சென்ற இடத்தில் அவர்கள் ராகேஷ்வர்மா என்ற கண்ணனுடன் தகாத நட்புடன் இருந்தது என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த நபரை தான் திருமணம் செய்வேன் என்று இருந்ததால் தான் எனது மகள் திருமணம் செய்யாமல்

இருந்தார் என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் சேர்ந்து தான் எனது மகளை சமாதானப்படுத்தி அந்த பையன் வேண்டாம் 1ம் எதிர்மனுதாரர் குடும்பம் நல்ல குடும்பமாக இருப்பதால் அவரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. வரதட்சணை வழக்கு, இந்த வழக்கு மற்றும் சேர்ந்து வாழக்கோரி மனு செய்யும் போது நானும் எனது மகளோடு சேர்ந்து தான் வழக்கறிஞரை சந்தித்து விபரங்கள் சொல்லி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனது மகள் அவரது சொந்த விருப்பத்தின் பேரில் சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது மேற் சொன்ன வழக்குகளில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.

எனது சர்வீஸ் புத்தகத்தை பார்த்தால் நான் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் மற்றும் விருப்ப ஓய்வு பெற்றேன் என்று தெரியும் என்றால் சரிதான். எனது மகளுக்கு திருமணம் முடித்த போது கொரனா காலம் என்றால் சரிதான். அதனால் குறைந்த நபர்களை நிகழ்ச்சிக்கு கூப்பிட முடியும் என்றால் சரிதான். அந்த நிகழ்ச்சியில் 15 – 20 நபர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் 75 பேர் கலந்து கொண்டார்கள். அதை வீடியோ எடுத்தோமா என்றால் எதிர்மனுதாரர் தான் எடுத்தார். எதிர்மனுதாரர் எடுத்த வீடியோ மற்றும் ஆல்பம் சம்பந்தமாக எங்களிடம் காப்பி உள்ளதா என்றால் நாங்கள் மொபைல் போனில் எடுத்து போட்டோக்கள் மட்டும் உள்ளது. நாங்கள் தான் போட்டோ வீடியோ எடுத்தோம் என்றால் அதை வழக்கிற்காக மறைக்கிறோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை நான் விபரம் சொல்லி தான் தயார் செய்து நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பேராவில் சொல்லியுள்ள சங்கதிகள் சம்பந்தமாக ஆவணங்கள் எதையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 3வது பேராவில் சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 7, 8,9 ஆவணங்கள் அது நகல் என்றும் அதில் எந்தவிதமான கடை சம்பந்தமாக முத்திரைகளோ கடை சிப்பந்திகளின் கையொப்பங்களோ இல்லை என்பதும் அதிலும் டுப்ளிகெட் என்று தான் மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அது எனக்கு மெயிலில் வந்ததை தாக்கல் செய்துள்ளேன்.

அதுபோல் மெயிலில் வரவில்லை என்றும் அவைகள் இந்த வழக்கிற்காக தயார் செய்து கொள்ளபட்டது என்றாலும் அதவும் சொல்லிக் கொடுக்கபட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பழைய நகைகளின் விபரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த நகைகள் வாங்கும் போது எனது மகள் உடன் இருந்தாரா என்றால் எதிர்மனுதாரர் குடும்பத்தார் தான் இருந்தார் என்றால் சரிதான். சாதாரணமாக திருமண நிகழ்ச்சியில் தான மணமகனுக்கு எதையும் செய்வார்கள் என்றால் சாதாரண கால கட்டத்தில் செய்வார்கள். ஆனால் கொரனா காலம் என்பதால் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் முன்கூட்டியே செய்தோம். இதனை எனது மகளிடம் தெரிவித்தேனா என்றால் சொல்லியுள்ளேன். இதனை எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. நான் சொன்ன மாதிரி நகைக்கடைக்கு சென்று நகைகள் வாங்கியதாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல.

வரதட்சணைக்கும் சீர்வரிசைக்கும் வித்யாசம் உள்ளது என்றால் வரதட்சணை என்பது கேட்பது. சீர்வரிசை என்பது கொடுப்பது. 8 லட்சம் மதிப்புள்ள பொருட்களை சீர்வரிசையாக தான் கொடுத்தேனா என்றால் சீர்வரிசையாக கொடுத்தேன். ஆனால் அதற்குள் கேட்பு இருந்தது. அந்த கேட்பை நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் அதனை கட்டாயத்தின் பேரில் தான் கொடுத்தேன். ஆனால் அதை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து எத்தனை நாட்கள் பெங்களூரில் இருந்தேன் என்றால் 3 நாட்கள் மட்டும் தான் இருந்தேன். அதன் பிறகு பெங்களூருக்கு எப்போது சென்றேன் என்றால் 18.02.2021ல் சென்றேன். அந்த இடைப்பட்ட காலத்தில் எனது மகள் என்ன நடந்தது என்று போனில் தான் சொன்னார் என்றால் முற்றிலும் உண்மை. அந்த இடைப்பட்ட நாட்களில் நான் எங்கு இருந்தேன் என்றால் புனேவிலும் திருமங்கலம் கள்ளிக்குடியிலும் மாறி மாறி இருந்தேன். இந்த இடைப்பட்ட காலத்தில் நான் எவ்வித பேச்சும் எதிர்மனுதாரரிடம் பேசவில்லை என்று சொன்னால் பெரியவர்கள் மூலம் பேசினோம். யார் மூலமாக பேசினோம் என்று சொல்ல முடியுமா என்றால் திரு.ஆர்.ரங்கநாதன், திருவெங்கடேஷ் மற்றும் சிலர்

மூலமாக பேசினேன். இதனை எனது மகளிடம் சொல்லி கொஞ்சம் பொறுமையாக இருக்கும் படி சொல்லியுள்ளேன். அவ்வாறு எனது மகளுக்கு கொடுமை சம்பந்தமாக எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் கொரனா காலம் என்பதால் புகார் கொடுக்கவில்லை.